
Registered as a news paper.    பக்கங்கள்: பத்து    விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 28 (23.12.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:84

## சந்திரிகா - ரணில் அதிகார இழுபறியால் முதலீட்டாளர்களுக்கு பெரும் நெருக்கடி!

### எச்சரிக்கை விடுக்கிறது சர்வதேச நாணயநிதியம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அதிகார இழுபறி நிலையால் உள்ளூர் மற்றும் வெளியூர் முதலீட்டாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாகவும் -

இந்த அரசியல் நெருக்கடி அவர்களுக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியிருப்பதாகவும் சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜெர்மி கார்ட்டர் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டுக்கான, சிறந்த தொழிற்துறையாளருக்கான விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி ஜெர்மி கார்ட்டர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

வர்த்தகத்துறையில் ஈடுபடுபவர்கள், தமது தொழிலை முன்நோக்கிய பாதையில் கொண்டு செல்வதற்கு தந்திரமான முறையில் செயற்பட வேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கிருஷாந்தி கொலை வழக்குத் தீர்ப்பு:

## எதிர்த்து தாக்கல்செய்த மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது!

கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினர், தமக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து தாக்கல செய்த மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

கிருஷாந்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து வழக்கில், ஐந்து இராணுவச் சிப்பாய்களுக்கு ரயல் அட்பார் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

தமக்கு வழங்கப்பட்ட மரணதண்டனை சட்ட யாப்புக்கு முரணானது என மரணதண்டனை வழங்கப்பட்ட சிப்பாய்கள் சார்பில் உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுத் தாக்கல் தொடர்பாக, உயர் நீதிமன்றம் - சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரியிருந்தது. இந்த மனுவை விசாரணை செய்த சட்டமா அதிபர் திணைக்களம் ரயல் அட்பார் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட மரணதண்டனை சட்ட யாப்புக்கு அமைவாக வழங்கப்பட்டதாக நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்பித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நிலைவரம், உதவிப் பணிகள் குறித்து

# ஜப்பானியத் தூதுவர் - தமிழ்ச்செல்வன் பேச்சு!


ஜப்பானியத் தூதுவரை வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்.

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது

(கிளிநொச்சி)

**தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலமாக ஜப்பானிய அரசு வழங்கிவரும் உதவிகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வனுடன் இலங்கைக்கான புதிய ஜப்பானியத் தூதுவர் அகியோ அடா நேற்று கலந்துரையாடினார்.**

விமானப்படையின் விசேட ஹெலிகொப்ரர் மூலம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்த ஜப்பானியத் தூதுவரை புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்றார்.

சமாதான செயலகத்தில் ஜப்பானிய தூதுவருக்கும் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினருக்கும் இடையே சுமார் ஒரு மணிநேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்தப் பேச்சுகளில் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும் ஐ.நா. மற்றும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களூடாக ஜப்பானிய அரசு வழங்கும் உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - இலங்கை அரசாங்கத்துடன் சமா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையிலிருந்து தப்பியோடியோர் மீள இணைய தயங்குகின்றனர்!

### இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா கூறுகிறார்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்காக, எட்டு நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டபோதும் - மீளவும் இராணுவத்தில் இணைந்து கொள்ளப் பெரும்பாலானோர் முன்வரவில்லை என்று இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து சட்டவிரோதமாக தப்பிச்சென்று மீண்டும் சேவையில் இணைந்து கொள்ள முன்வரும்போது - தண்டனையை அனுபவிக்கவேண்டிவரும் என்ற அச்சம் காரணமாகவே தப்பியோடிய படையினர் மீளவும் படையில் இணைந்துகொள்ளத் தயங்குகின்றனர்.

இதனாலேயே தப்பியோடிய படையினர் மீள படையில் இணைந்து கொள்வதற்கு மீண்டும் காலஅவகாசம் வழங்கப்பட்டது. ஆனால்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு ஆயுதங்களை வழங்கவேண்டாம்; அமெரிக்காவிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை!

### இந்திய ஊடகம் ஒன்று இப்படித் தெரிவிக்கிறது

(புதுடெல்கி)

அமெரிக்க அரசாங்கம் இலங்கைப் படையினருக்கு எந்தவித ஆயுத உதவிகளையும் வழங்கக்கூடாதென விடுதலைப் புலிகள் கேட்டுள்ளதாக இந்திய பத்திரிகைச் செய்தியொன்று தெரிவித்தது.

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணைச் செயலர் அண்மையில் இலங்கை வந்தபோது விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவர் இந்தக் கோரிக்கையை விடுத்ததாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசு இலங்கைப் படையினருக்கு உதவிகளைச் செய்தால், அது விடுதலைப் புலிகளுக்கும் - அரச படையினருக்குமான சமநிலையை பாதிப்பதுடன், சமாதான முன்னேற்றத்தையும் பாதிக்குமென புலிகள் தெரிவித்ததாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற 2 மாதக் குழந்தையை விற்ற தாய்!

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்பைப் பெற்றுக்கொள்வதற்காக, தனது இரண்டு மாதக் குழந்தையை ஐயாயிரம் ரூபாவிற்கு விற்ற தாயார் ஒருவரை மாவத்தகம பொலிஸார் கைது செய்தனர்.

தனக்கு எந்த ஒரு வருமானமும் இல்லாததால், மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்குச் சென்று பொருளீட்டலாம் என்ற நோக்கிலேயே, தனது குழந்தையை விற்றதாக அந்த தாயார் பொலிஸாருக்கு விசாரணைகளின் போது தெரிவித்தார்.

குழந்தையை விலைக்கு வாங்கிய முஸ்லிம் வியாபாரி ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இருவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட இருப்பதாக குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரவி விஜேவர்த்தன தெரிவித்தார்.

## வடபகுதியில் பிடிபட்ட படகுகளை மீட்க இந்திய மீனவர் நெடுந்தீவுக்கு வருகை!

(நெடுந்தீவு)

வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்தவேளை மீனவர்களாலும் கடற்படையினராலும் கைப்பற்றப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இழுவைப் படகுகளை எடுத்துச்செல்வதற்காக, இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக்கு வந்துள்ளனர்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் அனுமதிபெற்று, நேற்று இந்தியக் கடற் படையினரின் வழித்துணையுடன் வந்த இவர்கள், இலங்கை - இந்திய கடல் எல்லையில் வைத்து இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கைக் கடற்படையினருடன் பத்து இழுவைப்படகுகளில், வந்த இவர்கள், நெடுந்தீவு பகுதியிலுள்ள தமது ஒரு படகை மீட்பதற்கு இருபடகுகளிலும் ஏனைய இடங்களிலுள்ள படகுகளை மீட்பதற்காக காரைநகர் கடற்படைத்தளத்திற்கு மிகுதி எட்டுப் படகு

(10 ஆம் பக்கம் பார்க்க)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
குளிர்சாதனப் பெட்டிகளுடன் கோடாக் கமரா,
கசெற் றேடியோ, சன்விச் ரோஸ்ரர்
SINGER®
இச் சலுகை 31.12.2003 வரை மட்டுமே!
No.1, Stanley Road, Jaffna. Tel: 021-2225408

# பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு சிவில் உடையில் பொலிஸார் பாதுகாப்பு

நாட்டில் தற்போது நடைபெறும் கிறிஸ்மஸ் மற்றும் இதர பண்டிகைகளை முன்னிட்டு பெண் பொலிஸார் உட்பட சுமார் 800 பொலிஸார் சாதாரண உடை அணிந்து பகல், இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக, கொழும்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

இதனைவிட 800 மேலதிக அவசரகால நடமாடும் பிரிவு, மோட்டார் சைக்கிள் ரோந்து அணி என்பனவும் பகல், இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

அத்துடன் மக்களை பிக்பொக்கட் மற்றும் வழிப்பறி திருட்டு போன்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக மிகவும் விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். இந்த சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால் இவர்களின் ஒத்துழைப்பினைக் கோரலாமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனம் தெரியாதவர்கள் யாராவது தரும் குடிவகைகளை குடிக்கவோ, உணவு வகைகளை உண்ணவோ வேண்டாமெனவும் மக்களை பணங்களுடன் தனியாக பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டாமெனவும் எச்சரித்துள்ளனர்.

### மேஜர் முரளி உட்பட 10 வேங்கைகள் தினம்

இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலின்போது, வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்பட பத்து வேங்கைகளின் பதினைந்தாவது ஆண்டு நிகழ்வு தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்று மாலை நான்கு மணிக்கு உரும்பிராயிலுள்ள மேஜர் முரளி ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியின் இடத்தில் இந்த நினைவு நிகழ்வு நடைபெறும்.

### விழிப்புணர்வு கருத்தரங்கு

எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 10மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த உயிர்கொல்லி நோயில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக, ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் செ.கலைவாணன் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்**

# வாகன வசதி செய்து தரக்கோரி அமைச்சர் மகேஸ்வரனுக்கு கடிதம்

காணாமற்போன தமது பிள்ளைகளின் நிலை தொடர்பாக அறிந்துகொள்வதற்காக கொழும்பு செல்வதற்கு தமக்கு வாகன வசதி செய்து தரும்படி அன்னையர் முன்னணியினர் அமைச்சர் மகேஸ்வரனை கேட்டுள்ளனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பு செல்லவுள்ள இவர்கள் அங்கு நீதி அமைச்சர் உட்பட பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அன்னையர் முன்னணியினர் போக்குவரத்து வசதி செய்துதருமாறு - அமைச்சர் மகேஸ்வரனைக் கோரும் கடிதமொன்றை, யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் இந்து சமய கலாசார அமைச்சு அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

அதேவேளை, படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும் நீதி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

## சிறு விளம்பரம்

**அறிவித்தல்**

சோதிடர் பாலகுருசாமி கணேசலிங்கம் அவர்கள் அன்பர்களின் அழைப்பை ஏற்று கொழும்பு சென்றிருப்பதால் பத்து நாட்களுக்கு சோதிட நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

பவர் செலூலர் அருகில், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(சி-1923)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் சமூக சேவையினைக் கௌரவித்து யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுகிறோம். வசாவிளான் மத்திய கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்த இவர் இளம் பராயத்திலிருந்தே சமூக சேவைக்காகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். கோப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் சேவையாற்றும் இவர் அச்சுவேலி கதிரொளி சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், ப.நோ.கூ.சங்க புஷ்பவதிக் கிளை நிர்வாகக்குழு, அச்சுவேலி வடக்கு கந்தசாமி கோவில் சித்திரத்தேர் அமைப்புக்குழு, பாரதி நாடக மன்றம், விவசாயிகள் சம்மேளனம் ஆகிய பல்வேறு அமைப்புக்களில் பொறுப்புவாய்ந்த பதவிகளில் இருந்தவர். விவசாயமும், வியாபாரமும் மூல தளமாகக் கொண்டு செயலாற்றிவரும் இவரது சேவைகள் சிறந்தோங்க வாழ்த்துகின்றோம்

*அன்பன் அச்சுராசா குடும்பத்தினர் - அச்சுவேலி*
*க.திருநாவுக்கரசு குடும்பத்தினர் - மானிப்பாய்*

(561)

**திரைஞ்சனல்ஸ்** சங்கானை

ஸ்ரீகாந், சினேகா நடித்த

**பார்த்திபன் கனவு**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**JOHNNY ENGLISH** (சி-1846)

**ராஜா** யாழ்ப்பாணம்.

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த

**எனக்கு 20 உனக்கு 18**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1847)

# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களை 2003.12.27 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்விற்கு வருகைதரும்போது கொண்டுவருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை:**

01. வரி அறவீட்டாளர்

**தகைமைகள்:**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை.

நேர்முகத்தேர்வு நடைபெறும்,
நாள்: 2003.12.27
நேரம்: காலை 09.00 மணி.
இடம்: வருவாய்ப்பகுதிச் செயலகம்,
யாழ்சாலை, பளை.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

*ஆளுகை,*
*மனிதவள மேம்பாட்டுப்பரிவு,*
*வருவாய்ப்பகுதி.*

(562)

## இன்று 15 வருட ஆரம்பம்

14 ஆவது வருட நிறைவு

இத் தினத்தில் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த வாழ்த்துக்களை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

**ஜோ.எகட்டனின்**
**ஜெசித்தாரா விருந்தகம்**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

உள்ளூர் தொலைபேசி 021 222 7227
அதிரடித் தொலைபேசி 0777 032188

இன்றைய ஸ்பெஷல்
கும்குமப்பூ சிக்கன் புரியாணி ரூபா 175/=
ஓடருக்கு முந்துங்கள்

(563)

# நகரசபை - சாவகச்சேரி

## 2004ம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் (255ம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160(3)ம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும், வருடாந்தப் பெறுமதியின் 10 % மான வரியொன்றினை 2004ம் ஆண்டு முறையே மார்ச் 31, யூலை 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31, ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாயத் தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

02. 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்ட பந்தி 1ன்படி சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வதிவிடங்கள் மீது 15% மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% மும் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

04. ஆதனவரி சார்பாக இடிந்த கட்டிடங்களுக்குரிய ஆட்சேபனைகள் யாவும் 31.01.2004ம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
22.12.2003

(சி-1922)

செயலாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல் - 2004

2003ம் ஆண்டு நான்காம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 31.12.2003ம் திகதி புதன்கிழமை பி.பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2003ம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபையின் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252, பிரிவு 252ன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாக செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-1921)

# ஆனந்தசங்கரி மட்டும்தான் இப்போது தனியாக நிற்கிறார்

## அம்பாறைக் கூட்டத்தில் மாவை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை பரப்புக்கூட்டம், நேற்றுமுன்தினம் அம்பாறை ஆலையடிவேம்பு - கலாசார மண்டபத்தில், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 9.50 மணியளவில் ஆரம்பமாகிய இந்தக் கூட்டம், மாலை 3 மணிவரையும் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான - மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம், துரைரட்ணசிங்கம், ரவிராஜ் ஆகியோரும் , ஐந்நூறுக்கும் மேற்பட்ட கூட்டணி ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், குறிப்பாக அம்பாறை மாவட்ட நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையினால், கட்சி சம்பந்தமான கேள்விகள் எவையும் எழுப்பப்படவில்லை. பொதுவாக அபிவிருத்திகள் தொடர்பாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றியுமே அங்கு கலந்துரையாடப்பட்டது.

மாவை சேனாதிராஜா இங்கு கருத்துக் கூறுகையில், இன்று உலக நாடுகளிலிருந்து இலங்கை அரசுவரை விடுதலைப் புலிகள்தான் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனப் பேசிக்கொண்டிருக்கின்ற வேளையில், தமிழர் விடுலைக் கூட்டணியின் பாரம்பரிய கட்சிக்குள்ளிருந்து, அதன் தலைவர் தமிழர்களை நோகடிக்கும் வகையில் பல கருத்துக்களை வெளியிடுகின்றமையால், அக்கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு பாரியதொரு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

இன்றைய நிலையில் நாடாளுமன்றத்திற்கு ஆனந்தசங்கரி போனால் அவரை வரவேற்பவர்கள் ஜே.வி.வி., ஈ.பி.டி.பி. போன்றவர்களாகத்தான் இருக்கிறார்கள். இதன்மூலமாக என்ன தெரியவருகின்றதென்றால், பேரினவாதிகள் - தமிழர்களுக்கு எதிராக யார் கதைத்தாலும், அவர்கள் தங்களுக்குச் சார்பானவர்கள் என்ற கருத்திலேயே செயற்படுகின்றார்கள். அவ்வாறு சார்பாகச் செயற்படுபவர்கள், தமிழ்மக்களின் நிலைமைகளை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கு கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தரப்பிலிருந்து - 'இவர்களை ஏன் இப்படிச் செயற்படுகின்றீர்கள் எனக் கேட்பதில்லையா?' எனக் கேட்டதற்கு - இவ்வாறானவர்களை நாங்கள் மன்றாட்டமாகக்கூடக் கேட்டிருக்கிறோம் என அவர் மேலும் கூறினார்.

விடுதலைப் புலிகள் - தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்க எவ்வளவோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்களை வைத்துத்தான் நாங்கள் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று தேர்தலில்வென்று, கூட்டமைப்புக்கு ஜனநாயக அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த அடிப்படையில்தான் அரசுடனான பேச்சுவார்த்தையில் - புலிகள் ஈடுபடவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இன்று அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசிக்கொண்டிருக்கிறது. ஆனால் இப்பேச்சுவார்த்தையினைக் குழப்புவதற்கு எமது கட்சித்தலைவர் செயற்படுவதனை நாங்கள் தட்டிக்கேட்டு, அதை பொதுச் சபையிலும் கொண்டுவந்தவுடன்தான், 'தான் அதற்குத் தலைவராக இருப்பதாகவும், இன்னோர் கூட்டம் போட்டு வேறு தீர்மானங்களை எடுத்துவிடுவோம்' என்று இறுதியில் சட்டரீதியாக தடை உத்தரவு போட்டிருக்கின்றார். இது ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட பெரும் இழுக்காகும்.

தற்போது ஆனந்தசங்கரி கொடுத்த மனுவை விசாரித்த நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு தொடர்ந்து இழுபட்டுச்சென்று செயற்பாடுகள் நடைபெறாமல் இருக்குமாக இருந்தால், அதற்கெதிராக சட்டரீதியாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு-

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவிக்கையில், இதில் பெரிய சட்டச் சிக்கல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதற்கு நாங்கள் சில வழிமுறைகளைக் கையாண்டு மாற்றுத் தீர்வு செய்வோம்.

இன்று சங்கரி மட்டும்தான் தனியாக உள்ளார். எங்களுடன் செயலாளர், பொருளாளர், உபதலைவர் உட்பட பலர் இருக்கிறோம். அவர் மட்டும் தனியாக நின்று எதையும் செய்ய முடியாது. அது தொடர்பாக தற்போது கேள்வி எதுவும் கேட்டவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

## பொலிஸார் துப்பாக்கி சூடு; பெண் ஒருவர் காயம்

புத்தளம் நகரில் பொலிஸார் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - காயமடைந்த பெண் ஆபத்தான நிலையில், புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 'ராகம' வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றை, அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு பொலிஸ் அதிகாரிகளினால் கேட்கப்பட்டபோது, ஏற்பட்ட வாக்குவாதத்தினால் பொலிசார் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதே, குறிப்பிட்ட பெண் காயமடைந்ததாக புத்தளம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.பி.இரத்னாயக்க தெரிவித்தார்.

## எரிபொருள் நிரப்பு நிலையம் கொள்ளையிடப்பட்டது!

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட குருக்கள்மடத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று கொள்ளையிடப்பட்டது. இனம்தெரியாத நபர்களினால்- நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவத்தில் - ஐயாயிரம் ரூபா பணமும், சுமார் 95 ஆயிரம் ரூபா பெறுமதியான எண்ணெய் வகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

## பாதுகாப்பு அமைச்சின்

# அதிகாரங்களை பகிர்ந்துகொள்ள ஜனாதிபதி தயாராகவுள்ளாராம்?



ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக - பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதில், தான் தாராளவாதப் போக்கை கடைப்பிடிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இலங்கையின் சமாதான முயற்சிகளை, தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக கூட்டு சமாதானசபை ஒன்றை உருவாக்குவது குறித்தும், ஜனாதிபதி ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதியின் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும்படி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் உட்பட சர்வதேச நாடுகளும், நிதிநிறுவனங்களும் வலியுறுத்திவரும் நிலையில், பாதுகாப்பு அமைசசின் அதிகாரங்களை ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான மனோ தித்தவெல - மலிக் சமரவிக்கிரம குழுவினரின் முயற்சிகளின்போது, பலவிடயங்கள் குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டபோதிலும், பாதுகாப்பு விடயத்தில் இணக்கப்பாடு எதுவும் காணப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக, சர்வதேச சமூகம் சிங்கள தலைவர்கள்மீது அழுத்தம் கொடுக்கத் தவறுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்கநிலையில், உடனடி மாற்றம் ஏற்படச் சாத்தியமில்லையெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் நிலவிவரும் அதிகாரப்போட்டி காரணமாக, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தை தேக்கநிலைக்குச் சென்றுள்ளது.

இவர்கள் இருவருக்கும் இடையில் நடைபெறும் சந்திப்புக்களும் பேச்சுவார்த்தைகளும் அவர்களின் போக்கில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

எனவே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பமாகும் சாத்தியமில்லையென, கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

பறிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சை - முழுமையாகத் திரும்பவும் ஜனாதிபதி வழங்காதவரை, பிரதமர் சமாதானப்பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இணங்கப்போவதில்லையென, ஐக்கிய தேசிய முன்னணியின் உயர் பிரமுகர்கள் தெரிவிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள்மீது அழுத்தம் கொடுப்பதில் அதிக அக்கறை செலுத்திய சர்வதேச சமூகம், அதேயளவு அழுத்தத்தை இலங்கையின் இரண்டு அரசியல் கட்சித் தலைமைகள் மீதும் செலுத்தத் தவறியுள்ளதாக, அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளென சர்வதே சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது!

## மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் - தமிழரின் ஏக பிரதிநிதிகள் என்பதை, சர்வதேச சமூகம் இன்று ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு - இராமகிருஷ்ணர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இதன் அடிப்படையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழரின் ஏக பிரதிநிதிகள் என்பதை வலியுறுத்திச் செயற்பட்டுவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தவொரு செயற்பாட்டையும், தமிழர்களுக்கான செயலாக்கருதி, தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளும் செயற்பட்டுவருகின்றன என தெரிவித்தார்.



யாழ். நூலக கேட்போர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சொல்லால் ஒரு மாளிகை நூல் வெளியீட்டு விழாவில் - நூலின் அறிமுகவுரையை சோ.பத்மநாதன் ஆற்றுவதனையும் அருகில் விழாவுக்கு வருகைதந்த பிரமுகர்களையும் படத்தில் காணலாம்

## ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக

# கலைப்பீட கற்கைநெறிகள் 29 ஆம் திகதி ஆரம்பமாகும்

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் கலைப்பீட கற்கைநெறிகள் இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் ஸ்ரீஜெவர்த்தனபுர பல்கலைக்கழகம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான சகல பரீட்சைகளும் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. முகாமைத்துவ வணிக பீடங்களின் இறுதிப்பரீட்சைகள் - எதிர்வரும் 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நடைபெறுவதோடு, ஏனைய வருடத்திற்கான பரீட்சைகள் - தை முதலாம் திகதி ஆரம்பமாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் நூலகங்கள் இந்த வருடத்திலிருந்து மாணவர் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டுக்கான மருத்துவபீடத்திற்கான கற்கைநெறிகள் அடுத்த தை மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் கருத்துத் தெரிவிக்கையில்- நாம் பல்கலைக் கழகத்தில் படிப்படியாக அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்து வருகின்றோம். முக்கியமாக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும். உரிமையாளர்கள் உள்ளே வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இப்போதுள்ள இந்தத் தடையை நான் நீக்கியதிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் வந்துபோகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் நிலைமைகளை வழமைக்குக் கொண்டுவருவதற்கு - மாணவர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், கல்விசார்ந்த ஊழியர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்திற்குள் தாம் விரும்பிய அரசியலை பின்பற்றுவதற்கு மாணவர்களுக்கு உரிமை உண்டு. எனினும், அரச செயற்பாடுகள் கல்விக்கு இடையூறாக அமையக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

### வடக்கு - கிழக்கில்

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இன்னமும் முன்னேற்றம் இல்லை

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் முடிந்து விட்டடன. வடமராட்சி கிழக்குப் பகுதியின அபிவிருத்திக்கென அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கென நிதியொதுக்கீடுகளும் செய்யப்பட்டன. ஆனால், இங்கு எவ்வித முன்னேற்றங்களையும் காணமுடியவில்லை இவ்வாறு கவலை தெரிவிததார். யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

2004 ஆம் ஆண்டுக்கான துரித அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான கூட்டம் நேற்றுமுன்தினம்- மருதங்கேணி இ.த.க.பாடசாலையில், மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது-

போராட்ட காலத்தில் மக்களும் சமூகநிறுவனங்களும் போராட்டத்துக்கு வெவ்வேறு பங்களிப்புகளைச் செய்தார்கள். அதேபோல், அபிவிருத்திக்கும் மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். யுத்தத்தினால் சீரழிந்த ஓரு பிரதேசத்தை பார்க்க வேண்டுமானால், வடமராட்சி கிழக்குப்பகுதியைப் பார்க்கமுடியும்.

யுத்தத்துக்கு முன்னரும் வசதிகள் குறைந்த பிரதேசமாக இது விளங்கியது. 500 வீடுகள் கட்டித் தருவதாக அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து, நிதியொதுக்கீடு செய்துள்ளன. ஆனால், எவ்வித வீடுகளும் கட்டப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அ.விநாயகமூர்த்தி, எம்.கே. சிவாஜிலிங்கம், திணைக்களத் தலைவர்கள், வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி மற்றும் கடற்புலிகளின் பிரமுகர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தினர் இந்தப் பிரதேசத்துக்காக முப்பது திட்டக் கோரிக்கைகளை முன்வைத்தனர். இதில் கல்வி, சுகாதாரம், மின்சாரம், வீதிகள், கடற்தொழில், விவசாயம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. (122)



உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் சிறுவர் பாடசாலை நடாத்திய வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் சிறுவர்களால் மேடையேற்றப்பட்ட மாம்பழக்கதை நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்களை படத்தில் காணலாம். (101)

### பதிவாளர் பதவிக்கு விண்ணப்பித்தோருக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இறப்பு பிறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களுக்கு தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் - எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளன. இந்த நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தமானி அறிவித்தல்மூலம் பிரதேச செயலகரீதியாக, இந்தப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய - விண்ணப்பித்தவர்களில், தகுதியானவர்களுக்கு மட்டுமே தற்போது நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சைகள் கடந்த 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் விடயம் தொடர்பான முறைப்பாடுசெய்ய, அன்னையர் முன்னணியினர் - கொழும்பு நீதி அமைச்சிற்கு செல்வது தொடர்பான கூட்டமொன்று, நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு அன்னையர் முன்னணி அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடல்களில், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி அன்னையர் முன்னணி கொழும்புக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கந்தரோடையில் விவசாய களஞ்சியம்

(யாழ்ப்பாணம்)

கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சினால், யாழ். மாவட்டத்திற்கு ஐந்து திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விவசாயக்களஞ்சியம் அமைத்தல், குளம் ஆழமாக்கல், வாய்க்கால்கள் திருத்துதல் போன்ற ஐந்து திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் - உடுவில் பிரதேசசெயலர் பிரிவில் கந்தரோடையில் ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்பாக, விவசாயக் களஞ்சியம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான அத்திவாரக்கல்லை வலி.தெற்கு பிரதேச செயலர் எஸ். திருபாகரன் நாட்டிவைத்தார். 10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் இந்தக் கட்டடத்திற்கு முதற்கட்டமாக 5 இலட்சம் ரூபா அரசினால் வழங்கப்பட்டது. (111)

# குடாநாட்டு தொழில் ஸ்தாபனங்கள் பாதுகாப்பு உரிமம் பெற்றிருக்கவேண்டும்

## சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலுள்ள சகல தொழில்ஸ்தாபனங்களும், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றிருக்க வேண்டுமென - யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

சுகாதாரத்தைப்பேணுதல் அல்லது சுற்றாடலைப் பாதுகாத்தல் என்பது, அனைவருக்கும் பொதுவான கடமையாகும். இதனை உணர்ந்து செயற்படவேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

இதனடிப்படையிலேயே, தொழில் ஸ்தாபனங்கள் தமது சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும்வகையில், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றிருத்தல் அவசியம்.

45 வகையான தொழில் ஸ்தாபனங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

உணவகம் முதல் கைத்தொழில் மற்றும் விவசாய, கால்நடை தொடர்பான சகல தொழில் ஸ்தாபனங்களும் இவற்றில் அடங்கும்.

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இத்தகைய உரிமங்கள் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல தொழில் ஸ்தாபனங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவற்றைப் பெறாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழில் ஸ்தாபனங்களின் சூழல் பற்றியும், அவற்றின் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்தும் ஆராய்வதற்காக சில அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களை மாகாண சுற்றாடல் பாதுகாப்பு சபை நியமிக்கும். அவர்களினூடாக யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட சகல பகுதிகளிலும், சுகாதார நிலைமைகள் அவதானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் நுளம்பு வலைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக - சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் - கந்தரோடை, சங்குவேலி, சுன்னாகம் மேற்கு மக்களுக்கு நுளம்பு வலைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் ஆரம்பநிகழ்வாக - கந்தரோடைப் பகுதியிலுள்ள இனங்காணப்பட்ட 10 மலேரியா நோயாளிகளுக்கு, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் வைத்து நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

இவை ஏனைய பிரதேச மக்களுக்கும் வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய மீனினங்களை வளர்த்து, அவற்றை குளங்களில்விடும் திட்டத்தை - சுன்னாகம் வாழ்வகத்தினர் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் ஆரம்பித்துள்ளனர். (101)

# கிராமமட்டத்தில் தலைமைத்துவத்தை மேம்படுத்தும் பயிற்சிப் பட்டறை

(நெடுந்தீவு)

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் - நெடுந்தீவு பிரதேச செயலகம் நடாத்தும் "கிராமிய மட்ட அமைப்புக்களின் தலைவர்களின் ஆற்றலை மேம்படுத்தல்" தொடர்பான பயிற்சிப்பட்டறை - நெடுந்தீவு செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்தப் பயிற்சிப்பட்டறை - நாளை வரை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.45மணி வரை இடம்பெறவுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வுகள் - நெடுந்தீவு பிரதேசசெயலர் ச.பேரானந்தன் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் ச.பொ.தில்லைநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக - நெடுந்தீவு பகுதி கோட்டக்கல்வி அதிகாரியும் கலந்துகொண்டார்.

மூன்று நாள் பயிற்சிப்பட்டறையில் - அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும், கிராம அபிவிருத்தி நடவடிக்கையில் அதன் பங்களிப்பையும், சமுதாய முன்னேற்றத்தில் இளைஞர்,யுவதிகளின் முக்கியத்துவம், பங்களிப்பு, பொது அமைபுகளில் பொதுமக்கள் பங்களிப்பை ஆதரித்தல், கிராமமட்ட தலைவர்களின் சமூகப் பொறுப்புக்கள், பங்களிப்புகள், சுற்றாடல் பாதுகாப்பில் கிராமமட்டத் தலைவர்களின் பங்களிப்பு, நிதி நடைமுறைகள ஆகிய தலைப்புக்களின் கருத்துரைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# இடைநிலை வகுப்புகளுக்கான பாடத்திட்டமிடல் கருத்தரங்கு

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் - 2004 ஆம் ஆண்டு இடைநிலை வகுப்புகளில் பாடத்திட்டமிடல் தொடர்பான கருத்தரங்கு - நாளையும், நாளை மறுதினமும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

நாளை - சமூகக்கல்வியும் வரலாறும், விஞ்ஞானம், தொழிநுட்பமும், வாழ்க்கைத் தேர்ச்சியும் கடல்வளம் உட்பட தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கும்.

நாளை மறுதினம் - ஆங்கிலம், கணிதம், தமிழ்மொழி இலக்கியம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

இந்த இடைநிலை வகுப்புகளில் - தரம் 6 - 11 வரை 2004 ஆம் ஆண்டு இந்தப் பாடங்களை முன்னெடுக்கவுள்ள ஆசிரியர்களுக்கு, அன்றைய தினங்களில் தாங்கள் கற்பிக்கவுள்ள தரங்களுக்கான கைநூல்களும், துணைநூல்களும் வழங்கப்படும் எனவும், தவறாது இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (17)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : சா.ஷானுஜா
முகவரி : அசோக் இல்லம், கட்டப்பிராய்.

முதலாவது அகவையில்



பெயர் : ப.தர்மிலா
முகவரி : 27 காரைக்காட்டு வேலி, வண்ணார்பண்ணை

ஏழாவது அகவையில்



பெயர் : தி.சதுர்யா
முகவரி : அகிலம், கொற்றாவத்தை.

பன்னிரண்டாவது அகவையில்



பெயர் : க.தயாளன்
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-------------
-------------------------
முகவரி :-------------------
-------------------------
பிறந்த ஆண்டு:-------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------
பெற்றோர் ஒப்பம்

# ஒளித்தொகுப்பு என்றால் என்ன?




**3.5** மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே ஒளித்தொகுப்பு **(Photosynthesis)** நடைபெற்றுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.



ஒளித்தொகுப்பு எனப்படுவது, வளியிலிருந்து காபனீரொட்சைட்டைத் தாவரங்கள், அல்காக்கள், சில வகையான பக்றீரியாக்களை உள்ளெடுத்து, சூரிய ஒளியின் உதவியுடன் நடத்தும் இரசாயனத் தாக்கமாகும். 'டானிஸ்' காட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் - கிறீன்லாந்தில் (**Green Land**) பாறைகளில் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து இந்த உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர்.

கிறீன்லாந்திலுள்ள இசுஆ (**Isua**) என்ற கடலின் அடியை (**Sea Bed**) ஆராய்ந்தபோது, பூமியில் 3.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பும் உயிர்கள் இருந்ததற்கான ஆதாரங்களை அறிந்துகொண்டனர்.

கடலின் அடிப்பாகத்தில் காணப்பட்ட மண்ணை (**Sediments**) ஆராய்ந்தபோது, 'யுரேனியம்' எனப்படும் கதிர்வீச்சுள்ள (**Radip Active**) உலோகம் - அதிகளவில் மண்ணில் படிந்திருந்ததை (**Precipitate**) கண்டு



கொண்டனர்.

இவை கடல்நீரிலிருந்துதான் பிரிந்திருக்கவேண்டும் எனவும் அறிந்துகொண்டனர். கடலின் அடிப்பாகத்தில் ஒளிச்சேர்க்கை நடைபெறாத காரணத்தினால், இந்த் உலோகங்கள் மண்ணில் செறிந்திருக்கலாம் என்ற கருத்தை அவர்கள் முன்வைத்துள்ளார்கள்.

ஆனால், இசுஆ என்ற பாறையில் யுரேனியமும், அதன் குடும்பத்தைச் சேர்ந்த தோரியமும் (**Thorium**) எவ்வாறு பாறைகளில் படிந்தன என அறிவதற்கு முற்பட்ட வேளையில், இந்த உலோகங்கள் ஒன்றிலிருந்து மற்றையதிற்கு மாறுவதற்கு - வளியிலுள்ள ஒட்சிசனுடன் இணைந்து ஒக்சியேற்றம் (**Oxidising**) நடைபெற்றிருக்கலாம் எனக் கருதினார்கள்.

இதனால், பாறைகளில் காணப்பட்ட நுண்ணங்கிகளில் (**Microbes**) ஒளித்தொகுப்பின்மூலம் ஒட்சிசன் கிடைத்திருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

# சார்ஸ் வைரஸ்




'சார்ஸ்' எனப்படும் நோய்க்கான வைரஸ்களை- பறவைகளிலும், மிருகங்களிலும் காணப்பட்ட வெவ்வேறான வைரஸ்களின் சேர்க்கை (**MERGER**) என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். சார்ஸ் நோயைப் பரப்பும் 'கொரோனா வைரஸ்' (**CHORONA VIRUS**) எனப்படும் கிருமியின்மூலமே பரவுகின்றது. இந்தக் கிருமியின் மரபணுவை (**GENES**) பகுத்தாய்ந்தபோது இந்த உண்மை தெரியவந்துள்ளது. சார்ஸ் நோயால் இதுவரை 774 மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும் 8000 மக்கள் பாதிப்புக்குள்ளானார்கள்.

இந்த நோய் - சீனா, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் முதலில் ஆரம்பித்ததாகக் கருதப்பட்டுள்ளது.

இந்த வைரஸ்கள் ஆரம்பகாலத்தில் மிருகங்களுக்கு நோய்களை உருவாக்கிவந்துள்ளன எனவும், பின்னர் பறவைகளில் காணப்படும் வைரஸ்களுடன் இணைந்து, மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும் மரபணுப் பரிசோதனைமூலம் தெரிந்துகொண்டார்கள். இவற்றின் மரபணுக்களில் 50 வீதமானவை பறவைகளில் காணப்படும் வைரஸின் இயல்பும், 50 வீதமானவை மிருகங்களில் காணப்படும் வைரஸின் இயல்பும் காணப்பட்டதாக 'டேவிட் குட்மன்' என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

# விமானமும் சூழலும்




**அ**திகரித்து வரும் விமானப் பிரயாணங்களின் தேவைகள் - பாரிய அளவிலான சூழல் பாதிப்புக்களை ஏற்படுத்த உள்ளதாகச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். ஆகாய விமானங்கள் தமது பறப்பின்போது, அதிக ஒலியை உண்டாக்குவதாலும், நச்சு வாயுக்களை வெளிவிடுவதாலும் சூழல் அதிக பாதிப்புக்குள்ளாகிறது.

பிரித்தானியாவில் ஸ்ரான்ஷ் ஒட் என்ற மரக்காடுகள் அமைந்த பிரதேசத்தில், புதிதாக விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்காகத் திட்டமிட்டுள்ளார்கள். இதன்மூலம், வளம் மிக்க காடுகள் அழிக்கப்படுகின்றது. இந்தக் காடுகளில் 400 ஆண்டுகளாக மரங்கள் அடர்ந்து காணப்பட்டன.

மேலும் இந்தக் காடுகளில் வாழ்ந்த மிருகங்களும், பறவைகளும் தமது வாழ்விடங்களை இழக்கநேரிடுகின்றது.


அதேநேரத்தில், விமானமொன்று வளிமண்டலத்தில் அதிகளவில் நைதரசன் ஒக்சைட்டை புகையுடன் வெளியேற்றுவதாகவும், இவை காடுகளில் படிவதால் அவற்றிற்கு உரமாக அமைத்து, மரங்களின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறவைகளின் சிற்பங்கள்



**மி**ருகங்களின் தந்தங்களினால் (**IVORY**) செதுக்கப்பட்ட சிறிய பறவைகளின் சிற்பங்களை (**FIGURINE**) அண்மையில் புவியியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றின் காலப்பகுதி 30,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதெனவும் அறிந்துகொண்டனர். இவை ஜேர்மனியிலுள்ள ஆக் பள்ளத்தாக்குளில் (**ARC VLLEY**) காணப்பட்டன. இவற்றில் கொர்மோறன்ற் எனப்படும் பறவைகள் - செட்டையைப் பின்புறத்தில் நீட்டியவாறு பறகும்நிலையில் காணப்பட்டன. பாதி மனிதனும், பாதி மிருகமுமாக வேறு சில உருவங்களும் காணப்பட்டன. இவற்றை எந்தக் காலத்தில் வாழ்ந்த மனித இனம் (**HOMINID**) செதுக்கியது என அறிய முடியாதிருந்தது. ஆனால், இவற்றைத் தற்காலத்து மனிதர்களே (**HOMO SAPIENS**) செதுக்கி இருக்கவேண்டும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்தப் பறவைகளின் சிற்பங்கள் பூமியின் மேல்பட்டதில் இருந்து காணப்பட்ட படலங்கள் அவை நவீன காலத்து மனிதர்களால் செதுக்கப்பட்டிருக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# எதிர்கால விமானம்



1903 ஆம் ஆண்டில் முதன்முறையாக ஆகாய விமானத்தை உருவாக்க முற்பட்டபோது, ரைட் சகோதரர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

இதேபோல், வருங்காலத்திலும் விமானங்களை உருவாக்குவதில் பிரச்சினைகளை அவற்றின் வடிவமைப்பாளர்கள் (**Designers**) எதிர்நோக்க வேண்டியுள்ளது.

விமானமொன்றின் வெளிப்புறத்தில் பல அசையும் பகுதிகள் காணப்படுகின்றன. விமானமொன்றின் செட்டைகளின் பகுதிகளை மேலும், கீழும் நகர்த்தவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

மேலும், விமானம் ஆகாயத்தில் பறக்கும்போது, அவற்றின் சில்லுகள் பாதுகாப்பாக உள்ளிழுக்கப்படுகின்றது.

இவற்றைச் செயற்படுத்துவதற்குத் திரவக்குழாய்கள்மூலம் அமுக்கியே (**Hydralic System**) செயற்படுத்துகின்றார்கள். புதிய விமான இயந்திரங்கள் வடிவமைக்கப்படும்போது, மின்சாரத்தின்மூலம் இவற்றை இயக்குவதற்கும் திட்டமிட்டுள்ளார்கள்.


# கமரூன் காடுகள்



**ஒ**வ்வொரு ஆண்டும் ஆபிரிக்க காடுகளிலிருந்து காட்டு மிருகங்களினை இறைச்சிக்காகக் கொல்வது அதிகரித்துக் கொண்டே செல்கிறது. 5 மில்லியன் தொன் இறைச்சியை கமரூன் காடுகளிலிருந்து உணவிற்காக வெளியே எடுத்து வரப்படுகின்றது. இதனால், பல அழிவின் எல்லையிலுள்ள விலங்குகள் மேலும் முற்றாக அருகிப்போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

மேலும், இந்த வகையான இறைச்சிகளில் - வழமையாக மனிதர் உண்ணும் இறைச்சிகள் மாத்திரம் அல்லாது, 'சிம்பன்சிஸ்' எனப்படும் குரங்குகளும், யானை போன்ற பெரிய மிருகங்களும் கொல்லப்படுகின்றன. மேலும் சில உயிரியல் அறிஞர்கள் (**BIOLOGIST**) இவற்றிற்கு ஆதரவு கொடுக்கிறார்கள். சிறிய மிருகங்களை மாத்திரம் கொலை செய்யும்போது, பெரிய மிருகங்கள் பெருகி வரமுடியும் எனவும், இவற்றைக் கொல்லுவதன்மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தமுடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.


# அதிகரிக்கும் யானைத்தந்த விற்பனை



ஆபிரிக்க நாடுகளான செனசல், ஐவரிகோஸ்ட், நைஜீரியா ஆகிய நாடுகளிலுள்ள யானைகளின் எண்ணிக்கைகளிலும் பார்க்க, அந்த நாடுகளில் விற்பனைக்கு உள்ள யானைத் தந்தங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. உலக வன விலங்கு நிதியத்தின் (W.W.F) கணிப்பில் - இந்த நாடுகளில் சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்பட்டு, தந்தத்துக்காக யானைகளை கொல்பவர்களின் (Poachers) எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். மத்திய ஆபிரிக்காவிலிருந்தே கூடுதலான தந்தங்கள் விற்பனைக்கு வருவதாகத் தெரிவிக்கின்றார்கள். வளர்ந்துவரும் தந்தங்களைக் கொண்ட யானைகளும் அருகிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணினியுகம்

அநேகமான உற்பத்திப் பொருட்கள் - அதன் ஆரம்பகாலத்தில் பெரிதாகவே தயாரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், இன்று அவை கையடக்கமாகவும், நுண்ணியதாகவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது பொருள் ஒன்றை நுண்ணியதாகத் தயாரிக்கும் முறை (Nano Techenology) மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இவை இலத்திரனியல் துறையில் பரவலாகப் பாவிக்கப்படும் மைக்ரோ ஷிப் ஆகும். இவை கணினி கையடக்கத் தொலைபேசி, டிஜிற்றல் கமெரா ஆகிய உபகரணங்களில் மிகவும் முக்கிய ஒரு பகுதியாகக் கருதப்பட்டுள்ளது.



தற்போது இந்த ஷிப் இல் இலத்திரனியல் சுற்று ஒன்றை உருவாக்குவதற்கு மெல்லிய ஒளிக்கற்றையையே பாவித்து வருகின்றனர். இந்த ஷிப்பை, மேலும் சிறிதாக்க விஞ்ஞானிகள் விரும்பியுள்ளனர். இதனால், இவற்றின் சுற்று ஒன்றை உருவாக்குவதற்குப் புதியமுறையொன்றைத் திட்டமிட்டுள்ளனர்.

இதனால், தற்போது மூலக்கூறுகளைத் தமக்குத் தேவைப்படும் சுற்றுக்கள் வழியே ஒழுங்கு செய்துகொள்ளுமாறு அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளார்கள். சில வகையான பொலிமர்கள் (Polymers) சுயமாகவே தமது மூலக்கூறுகளை ஒழுங்குமுறையில் அமைத்துக் கொள்வதாகவும், இதனால் மின்சுற்றுக்களை அமைப்பதற்கு உதவுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

# நோர்வேயில் எண்ணெய்

ரஷ்யாவின் பிரதேசத்தில் அமைந்துள்ள நோர்வேயின் கடல் பிரதேசமான பாறென் கடலை - எண்ணெய் ஆய்விற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்குச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான அறிஞர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எண்ணெய் ஆய்வின்போது, கடலில் பரவும் எண்ணெய், கடலில் காணப்படும் உயிரினங்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்கள்.

நோர்வேயின் பிரதான தொழிலாக மீன்பிடித்தல் அமைந்துள்ளது. எண்ணெய் அகழ்வுகள்



மீன் பிடித்தலைப் பாதிக்கலாம் எனவும் கருதுகின்றனர்.

ரஷ்யா தனது கடல் எல்லையைச் சரியானமுறையில் வகுத்துக்கொள்ளவில்லை. இதனால், இந்தப் பிரதேசத்தில் ரஷ்யாவின் எண்ணெய் அகழ்வுகளைத் தடைசெய்ய முடியாதநிலையிலும் நோர்வே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# திரை விமர்சனம்

'சூப்பர் ஸ்டார் பட்டம் எனக்குவேண்டும். நான் அதைப்பெறப் போராடுவேன். யார் சூப்பர் ஸ்டார் என்பதை ஆஞ்சநேயா பதில் சொல்லும்'

முதல் பாதி 'தூள்'. இரண்டாம் பாதி 'சாமி'. நடுவில் கொஞ்சம் 'தில்' என விக்ரமின் வெற் றிப்படங்களை கலந் தடித்ததுதான், ஆஞ்சநேயா!

மந்திரி வீட்டின் விழாவில் நிறுத்தி வைக்கப்பட்ட தீயணைப்பு வண்டிகளை நெருப்புப் பற்றியெரியும் இடத் துக்கு அனுப்பி வைக்கும் அடாவடி ஸ்டைலிலேயே




புரிந் துவிடுகிறது - மனிதர் எந்த அநீதி யையும் பார்த்து சும்மா இருக்கமாட்டார் என்று.

தங்களது காலனியில் குடிவரும் ரௌடியை எதிர்க்கிறார் அஜீத். இதனால், வன்முறையில் ஈடுபட்டவர் என்று முத்திரை குத்தி, ஐ.பி.எஸ். கனவைத் தகர்க்கிறது பொலிஸ். உடனே கோட்டில் முறையிட்டுத் தானே வாதாடி, அஸிஸ்டெண்ட் கமிஷனராக போஸ்டிங் பெற்று, இடைவேளையில் ரசிகர்களைப் பார்த்து உற்சாகமாகக் கண் ணடிக்கிறார் அஜித்.

ரமேஷ் கண்ணா, வையாபுரி, கோவை சரளா இருந்தும் காமெடி எடுபடவில்லை.

மீரா ஜஸ்மினைவிட அழகாக இருக்கிறார் அஜித். ஆனால், ஐ.பி.எஸ். அதிகாரிக்குத் தேவையான உடல், மொழியையும் மிடுக்கும் காணமுடியவில்லை. தமிழ் சினிமாவில் இது பொலீஸ் சீசன் என்று தவறாகக் காக்கி உடை அணிந்திருக்கிறார்.

இடைவேளைக்கு முன்பு தந்தை ரகுவரனின் கட்டளையைத் தாண்டி, ரௌடியை அஜீத் எதிர்ப்பதும், பின்னர் கோட்டில் தனக்கெதிராகச் சாட்சி கூறியவர்களை உளறவைப்பதும் (கொஞ்சம் நாடகத்தனமாக இருந்தாலும்) என ஒரு இருபது நிமிடம் சுவாரஸ்யமாகச் சென்றாலும், அதன்பிறகு வரிசையாய் வில்லன்கள் தோன்றுவதும், அஜித் 3 கொலைகளுக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கப் போராடுவதும் தியேட்டரை உற்சாகப்படுத்துகின்றது.


கொலைகளை நேரில் பார்த்துவிட்டு, பொலிஸில் முறையிட்ட தன் மகனை காக்க சீதா போராடுவதும், குற்றத்தை ஆராய நியமிக்கப்பட்ட நீதிபதி - எதிரிகளைக் கண்டு பயந்து குழப்புவதும் - சத்தில்லாத காட்சிகள். இதற்கிடையே வில்லனின் வீட்டிற்கு பொலிஸ் அதிகாரியான அஜித் தனி ஆளாய் காவல் காப்பது திரைக்கதைக் காக மினக்கெடாத செயல்.

விஜய்காந்த் படத்தில் ஒலிக்கும் பின்னணி இசையை அப்படியே சுட்டிருக்கிறார் மணிசர்மா. வில்லன் ஹிட்டிற்கு பிறகு அஜித், வல்லரசு ஹிட்டிற்குப் பிறகு இயக்குநர் மகாராஜன் என இரு மலைகள் இணைந்தும், இறுதியில் தூள்தூளாய் போனதன் மர்மம் என்ன? ஹீரோயிசம் காட்சிகள், 4 பாட்டுகள், 4 சண்டைக் காட்சிகள் பக்கம் பக்கமாய வசனங்கள், 3 நகைச்சுவை நடிகர்கள்.... என திரைக்கலை அமைத்தால்போதும். ரசிகர்களை சுலபமாய் திருப்திப்படுத்திவிடலாம் என்று குறைத்து மதிப்பிட்டதுதான்- - ஆஞ்சநேயா சூப்பர் ஸ்டார் படத்திற்கான பதிலா? சிரிப்பு வருகிறது அஜித். RNS.

# வாரம் ஒரு யோகாசனம்

## ஓங்காராசனம்

ஓங்காராசனம் செய்யும் விதம்- சமனான தரையில் பத்மாசனத்திலிருந்து தோள் பின்பகுதிக்கு இடது காலைத் தூக்கி, தோளில் பதிக்கவும். பதிக்கும்போது, முன் குனியவும். பின்பு வலது காலை வலக்கைக்கு மேலால் இடது கைக்குள்ளால் வைக்கவும். இரு கைகளும் நிலத்தில் பதிந்திருக்கவேண்டும். இது முதல் ஆரம்பப்பயிற்சி. முதுகுத்தண்டு வலிக்கும், வயிற்றில் சாதாரண பிடிப்பு உண்டாகும், கால்கள் வலிக்கும். எடுத்த எடுப்பில் இப்பயிற்சி செய்தல் ஆகாது. படிப்படியாகச் செய்யவேண்டும். நாளடைவில் வலிகள் மறைந்துவிடும். இரண்டாம் படியாக - இடதுகாலுக்கு மேல் வலக்காலையும் வைத்து, லொக் போடவேண்டும். இறைவனை வணங்கும் நிலைதான் ஓங்காராசனம். சீராக மூச்சு இழுத்து விடவேண்டும்.



முதல் ஆரம்பம் ஒரு நிமிடம் செய்தால் போதுமானது. பின்னர், பழகப்பழக 5, நிமிடங்கள் செய்தால் சிறந்த பயனைத் தரும். இது கடுமையான, சிரமமான பயிற்சி. அதற்காக மனதைத் தளரவிடாதீர்கள். பழகப்பழக எளிதாகிவிடும்

**நன்மைகள்**

இவ்வாசனத்தால் - இதயம், இடுப்பு, வயிறு, கால், கை என்பன வலிமை பெறுகின்றன. பல நோய்களையும் தீர்க்கவல்லது. இவ்வாறான நோய்களுக்கு கைகண்ட மருந்தே ஓங்காராசனம் ஆகும்.

*தருபவர் - மா.மகாநேசன்.*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்*
*முடிந்தாலும் பீழை தீரும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### சந்திரிகாவின் புதிய வியூகம்!

இன்னும் இரண்டு ஆண்டுகள் - அதாவது 2005ம் ஆண்டு டிசம்பர் வரை தனது பதவிக்காலத்தை முழுமையாக சர்வாதிகார பலத்துடன் அனுபவிக்கக்கூடியதான அரசியல் யாப்பு ரீதியிலான உரிமையைக்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா, நாடாளுமன்ற தேர்தலில் தனது பொ.ஐ.முன்னணிக்கு கிடைத்த தோல்வியை அடுத்து சிறிது பலவீனமுற்ற நிலையில் கடந்த மூன்றாண்டு காலமாக - ஒரு விதமான வெறுப்பு, விரக்தி, கோபம் மற்றும் வெஞ்சினத்துடன் தன் கொள்கைகளுக்கு நேர் விரோதமான அரசியல் போக்கினைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசுக்கு சில விட்டுக்கொடுப்புகளை விருப்பமின்றி மேற்கொண்டு இயங்கவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

பொ.ஐ.முன்னணி 1995 முதல் 2000 வரையிலான காலப் பகுதிகள் - சிறிலங்காவின் ஆட்சி நிர்வாக அதிகார மூலங்கள் அனைத்தையும் தன்வசமாக்கிக்கொண்டு தன்னிச்சையாகவே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டபோது அதன் குறைநிறைகளைத் தட்டிக்கேட்க எவரும் முயல அனுமதித்ததும் இல்லை அதற்கு எவருக்கும் அதிகாரம் இருந்ததுமில்லை.

அப்படி எவராவது எதிர்த்தாலோ, தட்டிக்கேட்டாலோ ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலம் அவரை ஏதோ ஒரு வழியில் தண்டிக்காமல் விட்டதுமில்லை. அதிலிருந்து எவரும் தப்பியதுமில்லை.

'போருக்கே' சமாதானத்துக்கான யுத்தம் என வரைவிலக்கணம் கொடுத்து மூர்க்கத்தனமான தமிழின அழிப்பை மேற்கொண்ட இருண்ட காலம் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலமாகும்.

ரணில் ஆட்சிக்கு வந்தமையானது, சந்திரிகா பெரும்பாலும் எதிர்பார்க்காத ஒரு நிகழ்வாகவே அமைந்ததில் அவர் ஏமாற்றமடைந்தவராகவே இருந்தார்.

அதுவும் ரணிலின் ஆட்சியானது விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்த சூழலில் பொறுப்பை ஏற்றதும், அதனைத்தொடர்ந்து சர்வதேச சமூகத்தின் பரந்த அளவிலான ஆதரவுப்பின்னணியுடன் குறிப்பாக நோர்வே அரசின் அனுசரணையுடன் கூடிய ஏற்பாடுகளுடன் சமாதானப் பேச்சுக்களுக்கான தளம் அமைக்கப்பட்டதும், புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டதும், முதலாம் சுற்று, இரண்டாம் சுற்று எனத்தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் சுமாராகவேனும் நம்பிக்கைதரும் விதத்தில் தொடரத்தொடங்கியதும் சந்திரிகா கனவுகூடக் கண்டிராத நிகழ்வுகளேயாகும்.

எல்லாவற்றையும்விட சந்திரிகாவின் 'போராட்சிக்' காலத்தில் எவ்வளவோ முயன்றும், நீண்டகாலப் படையெடுப்பொன்றை நடத்திய சாத்தியமற்றுத் தோல்வியடைந்த ஏ-9 நெடுஞ்சாலை திறப்பானது மிகச் சுலபமாக புரிந்துணர்வு உடன்பாட்டின்பேரில் நிகழ்ந்ததும், அதனை நாடு பூராகவுமுள்ள மக்கள் வரவேற்றதும் சந்திரிகாவின் போர் மூலமான மூலோபாயங்களுக்கு கிடைத்த மோசமான தோல்வியாகவும் அமைந்தது. இது அவரால் சகித்துக் கொள்ளமுடியாததொன்றுமாகும்.

அதனை அடுத்து நகர்ந்த காலங்கள் சமாதானத்தின் அவசியத்தையும், நியாயத்தையும் மட்டுமல்ல, விடுதலைப் புலிகள் பக்கமுள்ள நியாயத்தின் முக்கியத்துவத்தையும் கூட உலகிற்கு உணர்த்தும் நிகழ்வுகளை, திருப்பங்களைக் கொண்டதாக அமைந்தமையானது பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கால இராஜதந்திர நகர்வுகளுக்கு கிடைத்த பலத்த அடியாகவும் அமைந்தது.

ஆனாலும் சந்திரிகா சளைக்கவில்லை. தனக்கான அதிகார பலத்தின் நம்பிக்கையில் அவ்வப்போது சமாதான நகர்வுகளை, ரணிலின் செயற்பாடுகளை, விடுதலைப் புலிகளை அச்சுறுத்தும் வகையிலான அறிக்கைகளை விடுத்த வண்ணம் தன் இருப்பை உணர்த்திக்கொண்டார். தனக்கான காலத்திற்காகக் காத்திருந்துகொண்டே அதிகார பூர்வமான சதியொன்றுக்கான அரசியல் நகர்வொன்றை மேற்கொள்ளும் திட்டத்தைத் தயாரிப்பதில் முனைந்தார் என்றே கூறவேண்டும்.

அதனையும் ரணில் அமெரிக்கா சென்றவேளை வெற்றிகரமாக நிறைவேற்றிய சந்திரிகா இப்போது அடுத்த வியூகத்தை அமைப்பதில் தன்கவனத்தை குவிமையப்படுத்திக் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

ரணிலுடன் இணைந்து தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை ஏற்படுத்தும் பொறிக்குள் ரணில் விழாமல்போகவே, மாற்றுவழிகளைத்தேடும் முயற்சியில் தீவிரம் காட்டும் சந்திரிகா-ஒருபுறம் விடுதலைப் புலிகளுக்கெதிரான குற்றச்சாட்டுக்களையும், பிரசாரங்களையும் அயல்நாடான இந்தியாவில் கதிர்காமர் மூலம் செய்துகொண்டே, ரணில் அரசுக்கும் பல்வேறு நெருக்கடிகளையும், அழுத்தங்களையும் கொடுத்தபடி சமாதான முயற்சிகளைப் புறந்தள்ள முயன்றுவருகிறார்.

இதேவேளை அரசைக் கலைக்கவோ, தேர்தலை நடத்தவோ துணிவற்றநிலை ஒருபுறமும், சமாதானத்தை முன்னெடுக்க அழுத்தம் கொடுக்கும் சர்வதேச சமூகத்தைச் சமாளிக்கமுடியாதநிலை மறுபுறமும் என சந்திரிகா திணறுவதும் தெரிகிறது.

அத்துடன் இப்போது தனது ஆட்சிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்கும் சாத்தியம் குறித்தும் ஆலோசித்துவருவதாகத் தெரிகிறது. இதுவும் மற்றொரு அரசியல் சதிக்கான உள்நோக்கத்தையே கொண்டதாகும்.

இந்த மூன்றாண்டு காலப்பகுதிக்குள் சமாதானச் சூழலை முற்றிலும் குழப்பி, ரணிலை முற்றிலும் செயலற்றவராக்கி, விடுதலைப் புலிகளுக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்திவிடலாமென்றே அவர் நம்புகிறார் போலும்.

## நாடும் நடப்பும்




### மினிபஸ் விபத்தை அடுத்து

# கைதானவர்களின் பிணை அனுமதி நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது!

கல்வியங்காட்டில் நடைபெற்ற மினிபஸ் விபத்திற்கு பின்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட ஐந்துபேரினதும் பிணை அனுமதிகள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டன.

இதுதொடர்பான விசாரணைகள் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நடைபெற்றபோது - சந்தேகநபர்கள் ஐவர் சார்பாகவும் ஆஜரான சட்டத்தரணி, பிணை அனுமதிகோரி மனுவொன்றை தாக்கல்செய்தார். இந்த மனுவை ஏற்கமறுத்த நீதிபதி - ஐந்து பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை, இச்சம்பவத்தில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட 29 சைக்கிள்களும் யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. இவற்றை உரியவர்கள் தகுந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆறுமாத காலப்பகுதிக்குள் மீட்கவேண்டும். அல்லாதுபோனால் சைக்கிள்கள் அனைத்தையும் பகிரங்க ஏலத்தில் விடுவதற்குரிய ஏற்பாடுகளை நீதிமன்றப் பதிவாளர் மேற்கொள்ளவேண்டுமெனவும், நீதிபதி இ.த.விக்கினராஜா உத்தரவிட்டார்.

### புனர்வாழ்வுப்பணிகள் குறித்து செயலகக் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்.மாவட்டத்தில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள அவசர புனரமைப்பு தொடர்பாக 29 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் அவரது செயலாளரும் மற்றும் சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் யாழ் அரச அதிபர் மற்றும் யாழ்.செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் முதலானோரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி, புனர்வாழ்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்திப்பணிகள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ப)

### சுகாதாரசேவை ஊழியர்களின் பிரச்சினை பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்

**சுகாதார ஊழியர் சங்கம் தெரிவிப்பு**

சுகாதாரசேவை ஊழியர்கள் தமது சம்பள முரண்பாடுகள் குறித்து, பிரதமரிடம் முறையிட்டிருப்பதாக சுகாதார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

1997 ஆம் ஆண்டுமுதல் தமது சம்பள நிலுவைகள் மற்றும சம்பள முரண்பாடுகள் குறித்து சுகாதார அமைச்சுக்கு தெரிவித்தபோதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சுகாதாரசேவை ஊழியர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

விரைவில் தமது சம்பள முரண்பாடுகள் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து முறையிடவுள்ளதுடன், தமது கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சம்பள முரண்பாடுகள் குறித்து கடந்த வாரம் முதல் சுகாதார ஊழியர்களின் போராட்டம் குறித்து எந்தவித நடவடிக்கையையும் எடுக்கப்படாததை அடுத்து தாம் இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தமது போராட்டம் தொடருமென சுகாதார ஊழியர்சங்கம் தெரிவித்துள்ளது. (01)

# நுண்கலைப்பீட மாணவர்கள் ஆறுபேர் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதிப்பு

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட சித்திரமும் வடிவமைப்பும் கற்கும் மாணவர்கள் 6 பேர் நேற்று சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழக விரிவுரைகளுக்கு 50 வீதத்திற்கும் குறைவான வீதத்தில் சமுகமளித்திருந்தமையால், இந்த ஆறு மாணவர்களும் இறுதி அரையாண்டுப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படவில்லை

இதனைக் கண்டித்தே - நிர்வாகத்திற்கு எதிராக இவர்கள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பாக இந்த மாணவர்கள் ஆறுபேரும் விடுத்துள்ள அறிக்கையொன்றில், தமது வரவு வீதம் குறைந்தமைக்காகப் பின்வரும் காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில், எட்டு விரிவுரைகளுக்கு மாத்திரம் வரவு பதியப்பட்டுள்ளது. இதனால், ஒரு வகுப்பிற்கு வராத மாணவன், 12.5 சதவீத வரவினை இழக்க நேரிடுகிறது. ஒரு விரிவுரையாளரின் பாடஅலகு இரண்டு கிழமைகள் தொடர்ச்சியாக நடைபெற்றமையால், அக்காலப் பகுதியில் சுகயீனமுற்ற மாணவன் அந்த விரிவுரையாளரின் அக்காலப் பகுதிக்குரிய விரிவுரைகளுக்கு சமுகமளிக்கமுடியவில்லை.

மருத்துவ சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், எமது மருத்துவ சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், ஒரே தன்மையுடைய வேறு சிலரது மருத்துவச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

வரவு வீதங்கள் தனிப்பட்டமுறையில் சில மாணவர்களுக்கு மாற்றம்செய்யப்பட்டு, பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் தமக்கு உடனடியாகச் சாதகமான பதிலைத் தரவேண்டுமெனவும், இல்லாவிடின் தாம் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் எச்சரித்துள்ளனர். இவர்கள் இரு கோரிக்கையை வைத்து தமது உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்திவருகின்றனர்.

அடுத்தவருடக் கற்கைநெறியைத் தொடர்வதற்கான அனுமதி வழங்குதல், புதிய கல்வி ஆண்டில் கற்கைநெறியை மேற்கொண்டபடி, தவறவிட்ட பரீட்சையினை எழுதுவதற்குரிய வழிவகைகளைச் செய்தல் ஆகியனவே அந்த இரு கோரிக்கைகளும் ஆகும்.

இந்தப் போராட்டம் தொடர்பாக இவர்களது சகமாணவர்கள் அதிருப்தி வெளியிட்டிருப்பினும், இது தொடர்பாக தாம் பல்கலைக்கழக நிர்வாகத்துடன்பேசி, உரிய தீர்வை இரண்டு கிழமைக்குள் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளனர். இதனை இந்த ஆறு மாணவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளார்

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் - தமிழ்நாடு பேரூர் ஆதீனமுதல்வர் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார் - தமது குழுவினருடன் எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளார்.


யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் வரையில் தங்கியிருக்கவுள்ள இந்தக் குழுவினர் - பல ஆலயங்களுக்கும், ஆதினங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்கள்.

ஆலயங்களுக்குச் சென்று அருளுரைகளை வழங்கும் அதேவேளை, தரிசனங்களையும் நிகழ்த்தவுள்ளார்கள்.

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் மேலும் பல சமயப் பெரியோர் மற்றும் அறிஞர்களையும் யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்து, இந்துசமயப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை பரப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)







# யாழில் கணினி ஓவிய வரலாற்றை தோற்றுவிக்கும் நந்தாவின் கண்காட்சி

நவீன ஓவியவரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துவரும் கந்தசாமி நந்தகுமார் - ஈழத்து மக்கள் மத்தியிலும் கணினி ஓவியங்கள் குறித்து ஆர்வம் ஏற்படல்வேண்டும் என்பதற்காக, கடந்த 12 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்தியிருந்தார்.

நவீன கலையுலகில் ஈழத்தவர் ஒருவர் வெளிநாடுகளிலும் தனது சாதனைகளைப் பரப்பி, தமிழர்களுக்குப் பெருமை தேடித் தருகின்றமை பாராட்டுக்குரியது.

இவரது ஓவியங்களைப் பார்க்கின்றபோது, எம்மவர்களின் வாழ்வில் ஏற்பட்ட துன்பதுயரங்கள் நிறையவே வெளிப்பட்டு நிற்கின்றமையை உணரமுடியும்.

தாயகத்தைவிட்டு 1985 ஆம் ஆண்டளவில் புலம்பெயர்ந்த இவர் - இங்கிலாந்து செல்லும்போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலைத்துறையில் பட்டப்படிப்பினைத் தொடர்ந்துகொண்டிருந்தார்.

தற்போது கனடா தேசத்தில் நிறுவனமொன்றில் வரைகலைநிபுணராகப் பணியாற்றி வருகின்றார்.

நவீன இலக்கியத்தின் கவிதை, சிற்பம், ஓவியம் எனப் பல்வேறு துறைகளிலும் இவரது ஈடுபாடு வெளிப்பட்டு நிற்கின்றது. இவரது ஓவியங்களில் கவிதை, சிற்ப ஆர்வத்தின் தாக்கங்கள் இல்லாமலில்லை.

மானுடரின் வாழ்வியல் துயரங்களில் அதிக வெளிப்பாடுகளைக் கொண்டதாக இவரது ஓவியங்கள் அமைந்துள்ளன. இதற்கு ஈழத்து மக்களின் உள்ளத்துக் குமுறல்களை, தான் நன்கு உணர்ந்திருப்தே காரணம் என்கின்றார்.

புலம்பெயர் வாழ்க்கையின் இயல்புபற்றிக் கேட்டபோது, அதனை அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும் என்கின்றார்.

வெளிநாட்டு வாழ்வென்பது - சுயத்தை இழந்தவாழ்வு. அது எமது அடையாளங்கள் தொலைந்த வாழ்வு.

அங்கு நாம் நடைப்பிணங்கள்தான். எனினும், எம்மை அந்த வாழ்க்கைக்குள் பழக்கப்படுத்தி விட்டோம். எமது வேர்கள் இங்குதான் உள்ளன.

உறவுகளின் உணர்வுகளைப் புரிந்தே சில ஓவியங்களில் நேரடியான விடயங்களாகச் சுதந்திர உணர்வைச் சித்தரித்துள்ளேன் என்கின்றார்.

இவரது ஓவியங்கள் - மனிதன் (சுவிஸ்), கனவு (இந்தியா), அவர் (இலங்கை), தோழி (இலங்கை), சமர் (பரிஸ்), உயிர் நிழல் (பிரான்ஸ்) முதலான கலை இலக்கிய சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

இவரது ஓவியக் கண்காட்சிகள் கனடாவின் ரொரண்ரோ, ஹெலிபக்ஸ் முதலான நகரங்களில் நடத்தப்பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற டாஸ் பர்டேஸ் (**Desh Pardesh**) நிகழ்விலும், 'தெற்காசியக் கலை இரவு' முதலான பல நிகழ்வுகளிலும் காட்சிப்படுத்தப்பட்டு, பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.

எனினும், இவர் தனது சொந்தப் பிரதேசமான தனது உறவுகள் வசிக்கும் யாழ்ப்பாணத்தில் இது காட்சிப்படுத்தப்பட்டமையே தனக்கு ஆத்மதிருப்தி தருவதாகவும், தனது ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் பார்த்து வாழ்த்துத் தெரிவிக்கும்போது உள்ளம் பூரிப்படைவதாகவும் தெரிவிக்கின்றார்.

ஓவியம் வரைவதில் இயல்பான ஆர்வம் காரணமாக உந்தப்பட்ட இவர் - இன்று ஓவியத்தில் பல நுட்பங்களையும், நுணுக்கங்களையும் புகுத்தி வருகின்றார்.

எல்லா ஓவியங்களையும்போல் தனது மனதைப் பாதித்த விடயங்களையே வரைந்து வந்த இவரின் ஓவியங்களினூடாகப் பல பரிமாணங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

குறிப்பாகச் சொல்லப்போனால், தமிழரின் சிதைந்துபோன வாழ்க்கை சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. முகவரி அற்ற மனிதன் ஒருவனின் உருவம் - பல்வேறு அவலங்களைச் சுமப்பதாகச் சித்திரிக்கின்றார்.

இதனைப் பார்ப்பவர்கள்- தமிழர் வாழ்வுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், கண்களில் நீர்கசிவு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

பெண் அடிமைத்தளைகளைக்களைய வேண்டிய தன் அவசியத்தைச் சிறப்பாகத் தனது கைவண்ணங்களினூடாக வெளிப்படுத்தி நிற்கின்றார்.

ஏக்கம், துன்பம், சோர்வு, தாய்மை முதலான பல தன்மைகளில் பெண்களின் முகபாவனையும், உணர்வுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அமைந்த ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன.

சாதாரண கோட்டோவியங்களை மட்டும் வரைந்து வந்த இவர், கணினியில் ஓவியங்களை வடிவமைக்க எடுத்த முயற்சிகளின் கடினமான தன்மைகளை, சில ஓவியங்களில் காணமுடிகிறது. சில ஓவியங்கள் மேலும் மெருகூட்டப்படவோ அல்லது உணர்சியூட்டப்படவோ வேண்டியிருப்பதாகச் சில ஓவியக் கலைஞர்கள் சுட்டிக்காட்டியபோதிலும், பாராட்டுதல் தெரிவிக்கவும் தவறவில்லை.

இதில் வியக்கத்தக்க விடயம் என்னவெனில், கணினியுடனேயே முழுப்பொழுதையும் கழிக்கும் சமூகமொன்று யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ளபோதிலும், இவரது கலை வடிவங்களைப் பார்த்தபின்புதான், கணினியில் இத்தகைய ஓவியங்களைப் பிரதிபலிக்க முடியுமென்பதை உணர்ந்து செயற்படத் தொடங்கியுள்ளமையாகும்.

இதுகுறித்து ஓவியர் நந்தாவிடம் கேட்டபோது - தான் யாழிற்கு வந்து, கண்காட்சி நடத்தியதில் தனக்குக் கிடைத்த வெற்றியில் மிகமுக்கியமானது அதுவே எனக்கூறி மகிழ்வடைந்தார்.

உலக நாடுகளில் பேசப்படும் அளவிற்கு வளர்ந்துள்ள இவரது ஓவியத்தின் ஊடாக வெளிப் படுத்தும் விடயங்கள் குறித்து நாம் கேட்டதற்கு -

என்னைப் பாதித்தவைகளையும், பாதிப்பவைகளையுமே கீறுகிறேன். தமிழ் மக்களின் துன்பங்களும், துயரங்களும் என்னை வெகுவாகப் பாதிப்பவை. போர் எமது வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்டது. இரண்டு சகாப்தங்களுக்கும் மேலாகப் போர் சப்பித்துப்பிய எச்சங்களாகவே நாம் இருக்கிறோம்.

தேசம் தொலைந்து, அகதிகளாய் அவலப்பட்டுப்போன வாழ்க்கை, இதுவெல்லாமேதான் எனது ஓவியங்கள் வெளிப்படுத்தும் மிகப்பிரதான விடயங்கள்.

பொழுதுபோக்கான ஓவியங்கள் எனக் குறிப்பிடக்கூடியவை, நான் வரைந்தவற்றில் மிகச்சிலவே என்கிறார்.

'புதியவெளி' என்பதே இவரது ஓவியக் கண்காட்சிக்கு இடப்பட்டிருந்த பெயர். இதற்கு அவர்தரும் விளக்கம் இதுதான் -

கணினியின் சாத்தியப்பாடுகளால் தரப்பட்ட புதியவழியே 'புதியவெளி'. இங்கு வர்ணங்களோ, வரைதாளோ, கன்வஸ்சோ (**Canvass**) பௌதீகநிலையில் உண்மையில் இல்லை.

கணினியின் பொறிநுட்பம் சார்ந்த வெறும் இலக்கங்களின் கோர்வைகளினால் இந்த கட்புலவெளி உருவாக்கப்படுகிறது என்கின்றார்.

இவரது கணினி ஓவியங்கள் - கணினியிலுள்ள ஒன்று (1) மற்றும் பூச்சியம் (0) ஆகிய இரு இலக்கங்களையும் மட்டுமே வைத்துத் தனது ஓவியங்களைத் தந்துள்ளார் என்பது அதிசயிக்கத்தக்க விடயம்.

தூரிகைகொண்டு வடித்தெடுக்கப்பட்ட ஓவியங்கள்போல் சில ஓவியங்கள் இருக்கின்றமை, இவரது நுட்பமான தொழிற்பாட்டிற்குச் சான்றுபகர்வனவாக அமைந்துள்ளன.



புலம்பெயர்வாழ்வு எப்போதும் எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது.

பார்வைக்கு அழகைத்தரும். ஆனால், நிஜத்தில் திருப்திப்படுத்தக்கூடிய ஒன்றல்ல என்பதை விளக்குவதாக, இவரால் வரையப்பட்டுள்ள இரு சப்பாத்துக்களின் வடிவமும், அதன் உயர்வுத் தன்மையும், ஆடம்பரமும் திகழ்கின்றன. இது இன்னோர் வகையாக விளங்கிக்கொள்ளச் செய்வதாக ஓர் ஓவியர் குறிப்பிடுகின்றார்.

அதாவது, எத்தகைய உயர் தன்மை கொண்டிருந்தாலும், சப்பாதது - காலில் போடப்படுவதுபோல் வெளிநாட்டின் பகட்டு வாழ்க்கை இங்குள்ளவர்களுக்கே பெரிதாகத் தெரியும். அந்த நாடுகளில் அடிபணிந்த வாழ்வாகவே அமைகின்றது எனகின்றார்.

இது பற்றி நாம் நந்தாவிடம் கேட்டபோது, என் ஓவியங்களை அவரவர் விளங்கிக் கொள்கின்ற வகையில் விளக்கம் அளிக்கப்படுவதையே விரும்புகிறேன் என்றார்.

முதுமை, தாய்மை, ஆண்மை, அழகு, காதல் போன்ற சுவையான வாழ்வியல் தத்துவங்களும், உலக நியதிகளும்கூட இவரது ஓவியங்களினூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த ஓவியங்களைப் பார்வையிட்ட

**செந்தணன்**

பலரது விமர்சனங்களில் - நந்தா, யாழ்ப்பாணத்து இளைய சந்ததியினருக்கு சிறந்ததொரு வழியை ஓவியத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார் என்பது வலியுறுத்தப்பட்டதைக் கேட்கமுடிநதது.

இவர் தன்னை ஒரு ஓவியன் என்று கூறிக் கொள்கின்றநிலையிலும், கணினி ஓவிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு இடத்தைத் தனித்துவத்துடன் பெற்று மிளிர்கின்றார் என்பதும், தாயகம் மட்டுமல்ல, உலக நாடுகளிலும்கூட இவர் புகழ் பரவியுள்ளதென்பதும் உண்மையே.

நவீன கலையில் மேலும் பல யுக்திகளைப் புகுத்துவதற்கு சற்றுக்காலம் எடுக்கும் என்றே கூறமுடியும்.

# டிப்ளோமாதாரிகளின் வேலைவாய்ப்பில் கல்வி அமைச்சர் துரித நடவடிக்கை

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் வேலைவாய்ப்பில், கல்வி அமைச்சர் துரித நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் கடந்த 10 ஆம் திகதியன்று, யாழ். கல்வி வலயத்தின் முன்னால் அடையாள போராட்டம் ஒன்றை மேற்கொண்டதைத் தொடர்ந்து, ஆசிரிய சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் - உடனடியாக கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கைக் கொழும்பில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

அந்தச் சந்திப்பில், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் - உடற்கல்வி டிப்ளோமாதாரிகள், சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன், நிர்வாக உறுப்பினர் ஜி.டபிள்யூ.ஜெயநேசன், என்.திலகராஜ் உட்படப் பல கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு - ஓர் ஆக்கபூர்வமாக அமைந்திருந்தது. அமைச்சர் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு, வேலை வழங்குவதில் எதுவித பிரச்சினையும் ஏற்படாது என்றும், இந்த விடயத்தில் உடனடி கவனம் எடுத்து, வெகுவிரைவில் உள்வாக்குவதாகவும், மூன்று வருடங்கள் காத்திருந்தது ஆச்சரியத்திற்குரிய விடயம் என்றும், இனிமேலும் காலம் தாழ்த்தாது, உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தக் கற்கைநெறி - யாழ். மாவட்டத்துக்கு மட்டுமன்றி, இலங்கை பூராகவும் தேவையானது எனவும், இந்தத் துறை ஆரம்பித்தது தொடர்பாகத் தனக்கு உத்தியோகபூர்வமான அறிவித்தல் கிடைக்கவில்லை எனவும், இதற்கான மேற்படிப்புக்குத் தன்னாலான உதவியையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சியில் நடந்த சந்திப்பில், தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் உட்பட மாகாண அமைச்சு கல்வி அதிகாரிகள் பலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.


இதில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு வேலைவழங்க வேண்டும் என உறுதியாகக் கூறியமை, மாணவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது. இதில் 15 உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் கலந்துகொண்டனர்.

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் போராட்டத்திற்கு இந்து கலாசார அமைச்சர், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் உட்படப் பலர் ஆதரவளித்தனர். அதுமட்டுமன்றி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தனக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய நேரத்தில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் வேலைவாய்ப்பை உறுதிசெய்யும் முகமாக, வர்த்தமானியை மாற்றியமைக்கும்படி கோரிக்கை விடுத்தார்.

மீண்டும் கல்வியமைச்சரின் செயலாளரை கடந்த 16 ஆம் திகதியன்று த.மகாசிவம் தலைமையில் சந்தித்துப் பேசியபொழுது- இன்னும் இரண்டு கிழமைகளில் திருத்தியமைக்கப்பட்ட வர்த்தமானி வெளிவரும் என உறுதியளித்தார்.

இவர்களின் சந்திப்பின்பின்னர், தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கூறுகையில், மீண்டும் உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் புறக்கணிக்கப்பட்டால், தாம் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# சேர்பியப் பிரதமர் ஷொரான் கொலை; விசாரணைகள் பெல்கிரேட்டில் ஆரம்பம்



சேர்பியப் பிரதமர் ஷொரான் ஜிண்டிக்கின் கொலை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 15 சந்தேக நபர்களுக்கெதிரான விசாரணைகள் தலைநகர் பெல்கிரேட்டில் ஆரம்பமாகியுள்ளன.

பிரதமரைக் கொலை செய்தவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியபோதும் இந்தக் கொலைக்குத் திட்டமிட்டவர் இதுவரை கைது செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது கொலைக்குத் திட்டமிட்டவர் முன்னாள் பொலிஸ் அதிகாரியான மிலோராட் லுகோவிக் எனவும், அவர் தலைமறைவாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெல்கிரேட்டில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்திலிருந்து தனது காரில் சேர்பிய பிரதமர் ஷொரான் ஜின்டிக் வெளியேறியவேளை சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட பிரதமர் ஜிண்டிக் மேற்கத்தைய சீர்திருத்தக் கருத்துக்களில் நாட்டம் கொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்தோனேஷிய படையினரின் 58 ஆவது ஆண்டு நிறைவின்போது விமானப் படை ஹெலிகொப்ரர்களின் அணிவகுப்பு.

# ஐ.நாவின் அணுசக்தி நாடுகள் அனைத்தும் லிபியாவின் திட்டங்களை பார்வையிடலாம்!

## அந்நாட்டு பிரதம மந்திரி அறிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணுசக்தி அமைப்பின் அங்கத்தவர்கள் தமது நாட்டில் அணுஉலை தொடர்பான அமைப்புக்களை பார்வையிடுவதற்கு அனுமதியை வழங்கியுள்ளதாக லிபியாவின் பிரதமர் "சுக்கிரியா" தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் லிபியா நடத்திய இரகசிய சமரச பேச்சுவார்த்தைகளின் பின்பே லிபியா இந்த முடிவை அறிவித்துள்ளது.

லிபியாவிடம் அணுகுண்டை தயாரிக்கும் திறன் இல்லாது விட்டாலும் அணுஆயுதங்களைத் தயாரிக்கும் நிலைக்கு தன்னை தயார்ப்படுத்தி வந்துள்ளதாகக் கூறப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகள் பல லிபியாவின் முடிவைப் பாராட்டியுள்ளன. ஈரான், எகிப்து ஆகிய நாடுகள் இஸ்ரேலிடம் இவைபோன்ற தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் இருந்தால் அகற்றிவிடுமாறு வேண்டியுள்ளன.

# பூட்டான் இளவரசருக்கு காயம்; அரச தரப்பு மறுப்பு தெரிவிப்பு!



இந்திய பிரிவினைவாதக் குழுக்களுக்கும், பூட்டான் படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலின்போது, பூட்டானின் இளவரசர் ஜிகல் உக்ஜெனனுக்கு காலில் காயமேற்பட்டதாக பூட்டான் இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்த கருத்து தவறானதென பூட்டான் அரசு அறிவித்துள்ளது. அத்துடன், புதுடெல்கியிலிலுள்ள பூட்டானின் தூதுவராலயமும் இந்தச் செய்திக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை - இந்தியப் பிரிவினைவாதிகளுக்கெதிரான போரை சில வாரங்களுக்கு நிறுத்தப்போவதாக ஆரம்பத்தில் அறிவித்திருந்த பூட்டான் படையினர், தற்போது இரு நாட்களுக்கு மாத்திரமே தாக்குதலை நிறுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அடுத்தகட்டத் தாக்குதல் மிகவும் சிரமமாக இருக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் பூட்டான் படையினர் தெரிவித்துள்ளனர். தற்போது பிரிவினைவாதிகள் காடுகளில் ஒளிந்திருப்பதாகவும் அவர்கள் மறைவிடங்களிலிருந்து தம்மீது தாக்குதல்களை அதிகம் நடத்தலாமெனவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - இந்தியாவின் பென்சால், அசாம் மாநிலங்களில் வாழும் பூட்டானியர்களை அந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேறுமாறு பிரிவினைவாதிகள் அச்சுறுத்தியுள்ளனர்.

# ஆப்கான் தலைநகர் காபூல் மீது இருதடவை ரொக்கட் தாக்குதல்!



ஆப்கானின் தலைநகர் காபூலின் வடபகுதியில் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது இரு றொக்கட் தாக்குதல்கள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் வீடு ஒன்று பலத்த சேதமடைந்தது.

றொக்கட் விழுந்த இடத்திற்கு அண்மையில் ஆப்கானுக்கான புதிய அரசியல் யாப்புத்தொடர்பான மாநாடு நடைபெற்றுவருவதாகவும், அதை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே தவறுதலாக மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்துள்ளதாகத்தெரியவருகிறது.

இதேவேளை - நேட்டோவின் சமாதானப் படையினரும், காபூல் அதிகாரிகளும் இந்தத்தாக்குதலை தலிபான் போராளிகளே நடத்தியதாகத் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவைத் தாக்க அல்கொய்டா திட்டமாம்!

அமெரிக்காவைத் தாக்குவதற்கு அல்கொய்டா போராளிகள் தயாராகி வருவதாக தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த நாட்டு புலனாய்வுத்துறையினர் அறிவித்துள்ளதையடுத்து, விமான நிலையங்கள், அணுசக்தி நிலையங்கள், பல்பொருள் விற்பனை அங்காடிகள் ஆகியவற்றின் பாதுகாப்புக்களுக்காக கூடுதலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் அமைந்துள்ள மிகப்பெரிய கோல்டன்கேற் பாலம், நியுயோர்க்கிலுள்ள அன்னியச் செலாவணி கட்டடம் ஆகியவற்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும் என பின்லேடனின் உதவித் தலைவர் கடந்த வெள்ளிக்கிழமை அரேபிய தொலைக்காட்சியான அல்ஜசீராவிற்கு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்தியத் தலைநகர் டெல்கியில் மூடுபனியால் விமானங்கள் தரையிறங்க முடியாத நிலை!

டெல்கிக்குச் புறப்பட்டுச்சென்ற சென்னை விமானங்கள் அங்கு நிலவிய கடும் மூடுபனி காரணமாக தரையிறங்க முடியாமல் மீண்டும் சென்னைக்கே திரும்பிவந்தன. தலைநகர் புதுடெல்கியில் கடும் மூடுபனி நிலவிவருகின்றது. இதனால் காலை 10.00 மணி வரை நிற்பவர்களை கூட காணமுடியாத அளவுக்கு பனிமூட்டம் நிலவி வருகின்றது. இதனால் டெல்கியில் வாகன, ரயில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று காலை சென்னையிலிருந்து டெல்கிக்குப் புறப்பட்டுச் சென்ற 3 விமானங்கள், கடும் மூடுபனி காரணமாக தரையிறங்க முடியாமல் சென்னை திரும்பி வந்துவிட்டன.

சென்னையிலிருந்து சென்ற ஜெட் ஏர்-வேஸ் விமானம் ஜெய்பூருக்குத் திருப்பியனுப்பப்பட்டு அங்கு தரையிறக்கப்பட்டது. அதே போல டெல்கியிலிருந்து சென்னைக்கு வர வேண்டிய விமானங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

# டி.ஆர்.பாலு, ராஜா ஆகியோரின் ராஜினாமாக்கள் பிரதமர் வாஜ்பாயின் பரிந்துரைப்படி ஏற்கப்பட்டன!

தி.மு.க உயர்மட்ட செயல் திட்டக்குழுவின் முடிவுப்படி மத்திய அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, ராஜா, ஆகியோர் தங்களது ராஜினாமா கடிதங்களை பிரதமர் வாஜ்பாயிடம் சமர்ப்பித்தனர்.

இந்த ராஜினமாவை ஏற்றுக் கொண்ட பிரதமர் அவற்றை ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு அனுப்பி வைத்தார். இதையடுத்து பிரதமரின் பரிந்துரைப்படி ராஜினாமாக்கள் ஏற்கப்பட்டதாக ஜனாதிபதி மாளிகை செய்திக் குறிப்பு வெளியிட்டுள்ளது.

முன்னதாக டி.ஆர்.பாலுவும் ராஜாவும் டெல்கி சென்று பிரதமர் வாஜ்பாயை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து தங்களது ராஜினாமாக்கடிதங்கங்களைச் சமர்ப்பித்தனர்

பின்னர் செய்தியாளர்களிடம் டி.ஆர்.பாலு பேசுகையில்,

எங்களது ராஜினாமாக் கடிதத்தை பிரதமரிடம் கொடுத்து விட்டோம். நாங்கள் ராஜினாமா செய்தது குறித்து பிரதமர் தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

எனக்கு முன்பே தமிழக பா.ஜ.கவுடனான பிரச்சினைகளை கவனத்துக்கு கொண்டுவரவில்லை என்று கேட்டார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி இந்தப் பிரச்சினையை அவ்வப்போது கிளப்பியதை சுட்டிக்காட்டினார். இனி மேல் பிரச்சினைகளின் அடிப்படையில் மத்திய அரசுக்கு ஆதரவு தருவோம். என்று கூறிவிட்டுத்திரும்பினோம் எனத் தெரிவித்தார்.

# பயணிகளை ஏற்றிச்சென்ற படகு பிலிப்பைன்ஸ் கடலில் மூழ்கியது!

## கடல் கொந்தளிப்புக் காரணமாம்

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் சலூ என்ற கடற் பகுதியில் அமைந்துள்ள தீவொன்றிலிருந்து புறப்பட்டுச்சென்ற பிரயாணிகள் படகொன்று நடுக்கடலில் மூழ்கிவிட்டதாக பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்படகு பலவன் என்ற பிறிதொரு தீவுக்கு செல்வதற்குத் திட்டமிட்டிருந்தது. கடற்கொந்தளிப்புக் காரணமாக படகில் சிறுதுவாரம் ஒன்று ஏற்பட்டிருந்ததாகவும் இதன் மூலம் படகு மூழ்கியிருக்கலாம் எனவும் கரையோரக் காவற்படையினர் தெரிவித்துள்ளனர்.


கடற்கொந்தளிப்பும், கடும் புயற்காற்றும் தேடுதல் பணிகளை தொடர்ந்து நடத்துவதற்கு தடையாக உள்ளதாக கரையோரக் காவற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே கடந்த ஞாயிற்றுக் கிழமையில் இருந்து இப்படகுடனான தொடர்புகள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படகில் 68 பயணிகளும், எண்ணிக்கை குறிப்பிடப்படாதளவு கப்பல் சிப்பந்திகளும் பிரயாணம் செய்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பிலிப்பைன்ஸில் சிறு தீவுகளிடையேயான போக்குவரத்துக்கு படகுகளே பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் ஆசிரியை ஒருவர் பாடசாலைக்கு சென்றுகொண்டிருக்கையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். மாணவர்கள் அவரைப் பார்வையிடுகின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

"ஈராக்கிலை இதுவரை காலமும் அமெரிக்கப்படைக்கு வயித்தைக் கலக்க வைத்தது சதாமின் படைகளல்லவாம்...."

"பின்னை...?"

'அது ஈராக்கின் தேசப்பற்றுள்ள மக்களும், பின்லேடனின் தலைமையிலான அல்-குவைதா போராளிகளும்தானாம்...!'

'ஆர்... சொன்னது...?'

'எல்லாம் பின்லேடனேதான்.... அவரது குரல் ஒலிப்பதிவு செய்த நாடாமூலம் இதை அறிவித்திருக்கிறார்...'

"ஆப்கானில்தான் பின்லேடன் என்றால்.... ஈராக்கிலும் பின்லேடனா?"

'கடவுளின் துணையுடன் அமெரிக்காவையும் அவர்களின் கூட்டணி நாடுகளையும் அல்-குவைதா வெற்றிகொள்ளும் என்றும் அவர் கூறியுள்ளாராம்....!'

'என்னடா இது? முன்கூட்டியே அறிவித்துவிட்டு தாக்கப்போகினமே...!'

'அதென்னமோ, ஈராக்கிலை அமெரிக்கப்படைகளுக்கு இனி இன்னும் அதிகமாகி வயித்தைக்கலக்கப்போகுது போலை இருக்குது....'

'பின்லேடனின் இலக்கு அமெரிக்கரை ஈராக்கில் தான் தாக்கும் என்றில்லை.... எல்லா இடமுமெல்லே தாக்கும் அதுதானே அமெரிக்கருக்கு நித்திரையில்லாமல் செய்யும் செய்தி....'

'சதாமைப் பிடிச்சாச்சு.... இனி பின்லேடன்தான் இலக்கு என்று அமெரிக்கா சொல்லி வாய்மூடமுன்னர் இந்த அறிவித்தலை பின்லேடன் விடுத்துள்ளமை தான் அமெரிக்காவையும் அதன் கூட்டணி நாடுகளையும் குழப்பும் விடயம்....'

'என்னமோ.... பின்லேடனின் ஆட்களுக்கு ஆண்டவன் துணையென்றால்...... அமெரிக்காவுக்கு ஆர் துணை'

" 'ஜோர்ஜ் புஷ்ஷை'த்தான் கேட்க வேண்டும்?" -தெருவாசி

# கைதடி சைவச் சிறார்களின் இல்லம் இந்து சமயப் பேரவையிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச்சிறுவர் இல்லம் இந்து சமயப்பேரவையிடம், சாவகச்சேரி நீதிமன்றக் கட்டளைப்படி பதிவாளர் விக்கினேஸ்வரமூர்த்தியினால் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச்சிறுவர் இல்லம் தொடர்பானதும், குற்றவியல் சர்ச்சை தொடர்பானதுமான வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆஜரானார்.

இந்த வழக்கில் நான்காம் எதிரியான சக்திகிரீவன் ஏற்கனவே நிரபராதியாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பேரில் நீதிவானால் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் ஏனைய மூன்று பேருடன் வழக்கு விசாரணை தொடர்ந்தது.

மேற்படி வழக்கில் சிறுவர் இல்லத்தின் ஒருபகுதி ஏற்கனவே நீதிமன்ற உத்தரவுப்படி சீல் அகற்றப்பட்ட நிலையில், அங்கிருந்த படையினரையும் வெளியேற்றி, இந்து சமயப் பேரவையிடம் கையளிக்கப்பட்டது.

மிகுதியாக உள்ளவற்றை நேற்று நீதிமன்றப்பதிவாளர் விக்கினேஸ்வரமூர்த்தி, இந்து சமயப் பேரவைத் தலைவரிடம், முழுப்பொறுப்புக்களையும் ஒப்படைத்தார்.

இதேவேளை, மேற்படி வழக்கு அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பேக்கரியில் ஆபாசப்படம் பார்த்தவர்கள் கலாசாரத்தை பேணும் குழுவிடம் சிக்கினர்!

## பருத்தித்துறையில் சம்பவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஓராம்கட்டைப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றில் ஆபாசப்படம் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் நேற்று நண்பகல் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

திருட்டுத்தனமாக இவர்கள் ஆபாசப்படம் பார்த்துக்கொண்டிருப்பதாக பொதுமக்கள் சிலரால் வழங்கப்பட்ட தகவலொன்றை அடுத்து, கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் குழுவால் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டனர்.

பின்னர், பிடிக்கப்பட்ட அனைவரும் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, வடமராட்சியின் ஏனைய பகுதிகள் சிலவற்றிலும் இவ்வாறான ஆபாசப்படங்களை பார்த்ததாக தெரிவிக்கப்படும் இளைஞர்கள் கடந்த சில நாட்களாக பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (202)

## சந்திரிகா....

எனவே தற்போதைய இலங்கையின் அரசியல் நெருக்கடி நிலையிலும் அவர்கள் தமது வர்த்தகத்தைப் பெருக்க தந்திரமாகச் செயற்படவேண்டியது அவசியம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அரசியல்...

தான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குரிய அதிகாரப் பலம் யாரிடம் இருக்கிறது என்பதை அறியமுடியாத காரணத்தினாலேயே சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்க முடியாத நிலைகாணப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜப்பானிய தூதுவர் அகியோ அடாவுடன் ஜப்பானிய தூதரான மூன்றாவது செயலாளர் அசிறோ இவாசேயும் கலந்து கொண்டார்.

புலிகள் தரப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பைத் தொடர்ந்து ஜப்பானியத் தூதுவர் அகியோ அடா கிளிநொச்சி வைத்தியசாலைக்கும், யு.என்.எச்.ஆர். அலுவலகத்துக்கும் விஜயம் செய்தார்.

## வடபகுதியில்...

களில் சென்றனர்.

நேற்று மாலை நெடுந்தீவிற்கு இரு படகுகளில் வந்தவர்களில் ஒன்பதுபேர் கடல் கொந்தளிப்பு காரணமாக படகில் தங்கியிருக்க, மிகுதி மூன்றுபேரும் நெடுந்தீவு கரைக்கு கடற்படையினரால் அழைத்துவரப்பட்டு நெடுந்தீவுப் பிரதேச சபையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று நெடுந்தீவிலுள்ள தமது படகினை எடுத்துச்செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அடிப்படை வசதிகள் வழங்கக்கோரி

# ஐம்பத்து மூன்றாவது நாட்களாகத் தொடரும் ரஜரட்டைப் பல்கலை மாணவர் போராட்டம்!

(கொழும்பு)

ரஜரட்டை பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்கள் தமது அடிப்படை வசதிகள் பூர்த்திசெய்யப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 53 ஆவது நாளாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கென, ஒரு அறையை ஒதுக்கித் தரக்கோரியும், மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு வசதியினை ஏற்படுத்தித்தரக்கோரியுமே மாணவர்கள் தமது போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர்.

எனினும், இதுவரை பல்கலைக்கழக நிர்வாகத்தினால் எந்தவிதமான பதிலும் இதுவரை தமக்குக் கிடைக்காமையால் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவருவதாகவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (01)

# முடிவுகள் எதுவுமின்றி முடிந்த கண்காணிப்புக்குழுக் கூட்டம்!

மட்டக்களப்பு செங்கலடிப் புல்லுமலைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுவருவதாகக் கூறப்படும் முகாம் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளா அல்லது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளா இருக்கிறது என்ற குழப்பத்தினால் நேற்று கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் - எந்தத் தீர்மானமும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தது.

மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்றைய கூட்டத்தில் அரச, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகள் இந்த முகாம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்திருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால், முகாம் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ளதாகப் படையினர் கூறுகின்றனர்.

நேற்றைய கூட்டத்தில் இதுதொடர்பாக ஆராயப்பட்டபோதும், இருதரப்பு பிரதேச எல்லைகள் இதுவரை நிர்ணயிக்கப்படாத காரணத்தினால் குறிப்பிட்ட பிரதேசம் யாருடையது என்று முடிவெடுக்கமுடியாமலுள்ளது என்றும், இதன் காரணமாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமை அலுவலகத்துடனும், விடுதலைப் புலிகளுடனும், படைத்தரப்போடும் ஆலோசனைகளை மேற்கொண்டு இந்த விடயத்திற்கு முடிவெடுப்பது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## படையிலிருந்து....

இந்தக் காலஅவகாசத்தைப் பயன்படுத்திக்கொள்வோர் மிகக்குறைவாகவே உள்ளனர்.

மீள இணைந்துகொள்ள வழங்கப்பட்ட அவகாசத்துக்குள் மீண்டும் சேவையில் இணைந்துகொள்ளாவிடின், அவர்கள் சட்டரீதியாக விலகிக்கொண்டவராகவே கருதப்படுவர்.

தப்பியோடிய படையினரை சட்டரீதியாக விலகிக்கொள்வதற்கு மாற்றுத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும், கம்பகா மாவட்டத்தில் இருந்து தப்பியோடிய 3500 பேரில் 725 படையினரே சட்டரீதியாக விலகிக்கொள்ள முன்வந்தனர் எனவும் இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா மேலும் தெரிவித்தார்.

# தேசிய நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு பிரதமரும், ஜனாதிபதியும் இணையவேண்டும்

தேசிய நெருக்கடிகளைத் தீர்க்கும் முயற்சியில் ஜனாதிபதியும், பிரதமரும் கூட்டாகப் பணியாற்ற வேண்டுமென, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது இரண்டு தலைவர்களினதும் பொறுப்பெனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசின் 'இலங்கைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவோம்' என்ற திட்டத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டி போராட்டம் நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் இலங்கையின் இயற்கை நலன்களை பல்தேசிய கம்பனிகளுக்கு விற்று, தொழிலாளர்களின் உரிமைகளை அபகரித்து, தேசத்தின் நலன்களை அழித்து விடும் யோசனையைக் கொண்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். (01)

# லஞ்சம் வாங்கிய பொலிஸ் கைது!

(கொழும்பு)

கராஜ் ஒன்றில் லஞ்சம் வாங்கியதாக குற்றம்சாட்டி இராணுவப் பொலிஸைச்சேர்ந்த மேஜர் ஒருவர் கைதுசெய்யபட்டுள்ளார்.

மின்னேரியா இராணுவ முகாமில் நுண்தொழில்நுட்பவியலாளர் பிரிவைச்சேர்ந்த கட்டளை அதிகாரியே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது இவரை அடுத்தமாதம் 5ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் பதிவு செய்யப்பட்ட கராஜ் சொந்தக்காரர்களிடமிருந்து 80 ஆயிரம் ரொக்கப்பணமும், 4 விஸ்கி போத்தல்களும் லஞ்சமாகப்பெற்றதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## அவசர கலந்துரையாடல்

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்துள்ள மூன்றாம், நான்காம் அணி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு, அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரு அணி மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்த்து...

இந்த மனு மீதான விசாரணை நேற்று உயர்நீதிமன்றில் நடைபெற்றபோது, இந்த மனுவை நிராகரிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

## படையினருக்கு...

இதேவேளை - தெற்காசிய விவகாரங்களுக்கான திணைக்களம் இதுபற்றித் தெரிவிக்கையில், அமெரிக்கா எந்தவித போர்த் தளபாடங்களையும் இலங்கைப் படையினருக்கு வழங்கவில்லை. எனவே விடுதலைப் புலிகள் இதுதொடர்பில் தேவையற்றவிதத்தில் அச்சமடையத் தேவையில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




மிக சொற்ப பிரதிகளே
விற்பனையாகின்றது
ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
P. உமாசங்கர் B.Com, Spl.Trd.Com.
(சி-1920)
சகல புத்தகசாலைகள், ஆசிரியரது வகுப்பு நடைபெறும் கல்வி நிறுவனங்கள்

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.